## இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் - 2013

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 31 ஆம் இலக்க இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவக அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கட்டிட நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட ஆலோசனைக் கட்டணமான ரூபா 360,000 தொகை உரிய சொத்துடன் மூலதனமாக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டில் செயற்பாட்டுச் செலவினமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் ஊழியர் பணிக்கொடைக்காக ரூபா 69,962 தொகை குறைவாக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) பௌதீக இருப்பு மெய்மையாய்வு இன்றி இருப்பின் புத்தக மீதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது விற்பனை செய்யப்பட்ட ரூபா 43,904 தொகையான வெளியீட்டு இருப்புக்களுக்காக சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் நூலகப் புத்தக மீதி ரூபா 193,593 ஆக இருந்த போதிலும் நன்கொடையாகக் கிடைத்த ரூபா 131,953 தொகையான புத்தகங்கள் மற்றும் வெளிநாட்டு நிதிப் பெறுமதிகளில் காண்பிக்கப்பட்ட யூ.எஸ். டொலர் 220.80 மற்றும் ஐக்கிய இராச்சிய பவுண் 201.25 பெறுமதியான புத்தகங்கள் கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக 1286 புத்தகங்களின் பெறுமதியும் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

மீளாய்வாண்டின் போது ரூபா 3,236,930 பெறுவனவுகளுக்குரிய பற்றுச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் வங்கிக்கு நேரடியாக அனுப்பப்பட்ட விடயங்களுக்காக பெறுவனவுகள் மற்றும் ஊழியர் கடன் தீர்ப்பனவுகளுக்காக பெறப்பட்ட ரூபா 1,132,797 தொகைக்காக பற்றுச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள்**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை XXIV ஆம் அத்தியாயத்தின் 11.1.5 ஆம் பிரிவு | ஒரு தடவை மாத்திரம் செலுத்தக்கூடிய ஆதனக் கடன் நிறுவகத்தின் ஆலோசனையாளருக்கு 2005 ஆம் ஆண்டின் போது ரூபா 700,000 தொகை செலுத்தியிருக்கும் போது 2012 ஆம் ஆண்டின் போதும் மீள ரூபா 500,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 371(ஆ) | 25 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 434,638 தொகையான முற்பணத்தைத் தீர்ப்பதற்கு 30 நாட்கள் முதல் 168 நாட்கள் வரையான கால இடைவெளியை எடுத்தமை அவதானிக்கப்பட்டது. முற்பணத்தை வழங்குவதற்கு முன்னர் செயற்பாடுகளை இனங்கண்டு செலவின மதிப்பீட்டைத் தயாரித்து அது அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வித திட்டமுமின்றி முற்பணம் வழங்கப்பட்டமையின் காரணமாக செலவிடப்பட்ட பணத்தில் அரைவாசியினை விட அல்லது அதற்கு அண்ணளவான தொகையை சேமித்து தீர்க்கப்பட்ட 69 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. மேலும் வழங்கப்பட்ட முற்பணம் தீர்க்கப்படுவதற்கு முன் மீண்டும் முற்பணம் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. |
| (ii) நிதிப்பிரமாணம் 751, 756 மற்றும் 757 | ஒவ்வொரு பிரிவுகளுக்கும் பொருட் பதிவேடு பேணப்படாதிருந்ததுடன் பொருள் மெய்மையாய்வு அறிக்கையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 264(1) | 36 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களுக்குரிய ரூபா 2,869,924 தொகையான கொடுப்பனவு செய்யப்பட்ட பணத்தை உரியவர் பெற்றுக் கொண்டமைக்கான உறுதிப்படுத்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iv) | நிதிப்பிரமாணம் 1645(அ), 1647(அ) | பிரமாணத்தின் பிரகாரம் வாகன சம்பவத்திரட்டுப் புத்தகம் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 01/2010/01 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சுச் சுற்றுநிருபத்தின் 3(III) ஆம் பந்தி | ஒரு உத்தியோகத்தர் கற்கை அல்லது பயிற்சிக்காக வெளிநாடு செல்கின்ற சந்தர்ப்பத்தின் போது ஒரு நாளைக்கு அ.டொலர் 30 படி செலுத்த வேண்டியமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிறுவகத்தின் இரண்டு உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கும் மாநாட்டிற்கும் பங்குபற்றியமைக்காக ஒரு நாளைக்கு அ.டொலர் 50 படி செலுத்தப்பட்டமையின் காரணமாக 14 ½ நாட்களுக்காக ரூபா 37,733 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2013 ஒக்தோபர் 07 ஆந் திகதிய 21/2013 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம் | (i) அரசாங்க விடுமுறை தினங்களில் வேலை செய்யத் தீர்மானிக்கின்ற பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது மேலதிக நேரப்படி பெறுவதற்கு உரித்தற்ற ஒரு உத்தியோகத்தர் ஒரு மாதத்தில் ஆகக்கூடியது 2 நாட்களுக்காக நிறுவனத் தலைவரின் முன் அனுமதியுடனும், இரண்டு நாட்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கைகளுக்காக அமைச்சுச் செயலாளரின் முன் அங்கீகாரம் பெறவேண்டிய போதிலும் 17 உத்தியோகத்தர்களுக்கு 42 நாட்களுக்காக அங்கீகாரமின்றி ரூபா 60,561 தொகை செலுத்தப்பட்டிருந்தது.<br><br>(ii) 2013 செப்தெம்பர் 19 முதல் ஒக்தோபர் 08 வரை 10 பதவிநிலையற்ற உத்தியோகத்தர்களுக்காக 35 நாட்களுக்கு ½0 படியான ரூபா 16,256 தொகை செலுத்தப்பட்டிருந்தது.<br><br>(iii) மேற்கூறப்பட்ட உத்தியோகத்தர்கள் எட்டு மணித்தியாலங்கள் வேலை செய்தமைக்கான வருகை வெளிச்செல்லல் உறுதிப்படுத்தப்பட வில்லை. |
| (உ) | 2005 மார்ச் 31 ஆந் திகதிய 08/2005 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம் | 2005 சனவரி 01 ஆந் திகதி முதல் வங்கியின் மூலம் ஆதனக் கடன் வழங்குதல் அமுல்படுத்தப்பட்டிருந்தது. எனினும் இந்த சுற்றுநிருபத்திற்கு முரணாக 10 உத்தியோகத்தர்களுக்காக ஏனைய வருமானக் கணக்குகளிலிருந்து ரூபா 8,433,200 தொகையான ஆதனக் கடன் நிறுவகத்திலிருந்து வழங்கப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம் மற்றும் 2013 சனவரி 31 ஆந் திகதிய 157(1) ஆம் இலக்க தேசிய | இடர் கடன் வழங்கும் போது ஆகக்கூடிய கடன் எல்லை 10 மாத அடிப்படைச் சம்பளம் அல்லது ரூபா 250,000 தொகை என்ற இரண்டில் குறைந்த பெறுமதி கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய போதிலும் மூன்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா 293,000 முதல் ரூபா |

| | |
|---|---|
| பாதீட்டுச் சுற்றுநிருபம் | 435,000 வரையான வீச்சில் இடர் கடன் வழங்கப்பட்டிருந்தது. அந்த எல்லையை விஞ்சி வழங்கப்பட்ட கடனை மீள அறவிடுமாறு தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் படி தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 போதியளவான அதிகார பாலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தாபன விதிக்கோவை மற்றும் சுற்றுநிருபங்களுக்கு இணங்காத வகையில் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ஊழியர் கடன் கொடுப்பனவுகள் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 13,622,846 ஆக இருந்ததுடன் அதில் 2010 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்ற மரணித்த மற்றும் சேவையிலிருந்து நீங்கிய 08 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 777,722 தொகை மற்றும் 2011 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 30,707 தொகையான ஏனைய ஊழியர் கடனையும் அறவிடுவதற்காக நிறுவனம் முறையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஒரு உத்தியோகத்தர் விண்ணப்பித்த கடன் தொகையான ரூபா 1,447,800 ஆதனக் கடன் பணத்தை விட ரூபா 100,000 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) திறைசேரி செயலாளரின் அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் சம்பளத்திற்கு மேலதிகமாக படிகள் வழங்கும் போது அமைச்சரவை அல்லது பொது நிருவாக அமைச்சு அல்லது பொதுத் திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட நலன்கள் மாத்திரம் செலுத்தக்கூடியதாக இருந்த போதிலும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தில் பின்வரும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

(i) மீளாய்வாண்டின் போதும் ஊக்குவிப்புப்படியாக ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 10,000 படி பணிப்பாளரை உள்ளடக்கிய பதவியணியினருக்காக ரூபா 286,257 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) படிகளைச் செலுத்துவதற்காக நிறுவகத்தினால் வழங்கப்பட்ட சுற்றுநிருபத்தின் நியதிகளுக்கு முரணாக வளப் பங்களிப்புப்படி, இணைப்பாளர்படி, எழுதுவினைஞர் படி மற்றும் அலுவலக உதவியாளர் படிகள் என 05 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 438,800 கூட்டுத்தொகையும் விஷேட பயிற்சி செயலமர்விற்காக செயற்திட்ட பங்களிப்பு படி பணிப்பாளரை உள்ளடக்கிய பதவியணியினருக்கு ரூபா 1,000 படி மீளாய்வாண்டின் போது ரூபா 31,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்திற்கு முரணாக செயற்திட்டங்களிலிருந்து கையளிக்கப்படுகின்ற வேலைகளைப் பகுதிகளாகப் பிரிப்பதற்கான படிகளை வழங்குவதற்கு மேலதிகமாக சம்பளத்தில் 1/3 பங்கு படிப்பணம் 2013 சனவரி மாதத்திற்காக மூன்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா 38,155 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2000 பெப்ரவரி 21 மற்றும் 2013 சனவரி 11 ஆந் திகதிகளில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில்லாத பதவியான ஊடக ஆலோசனையாளருக்கு மாதாந்தம் ரூபா 40,000 படி ரூபா 480,000 தொகையான வருடாந்த சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. அந்த உத்தியோகத்தரின் சம்பளத்தில் 2011 திசெம்பர் முதல் 2013 திசெம்பர் 31 வரை விதவைகள் அனாதைகள் மற்றும் அக்ரஹார கழிக்கப்பட்டு அந்த கழிப்பனவுகள் உரிய திணைக்களங்களுக்கு அனுப்பவேண்டிய போதிலும் விதவைகள் அனாதைகள் ரூபா 118,400 தொகை மற்றும் அக்ரஹார ரூபா 2,775 தொகை அட்டுறு செலவினக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. இந்த உத்தியோகத்தரின் வருகை மற்றும் வெளிச்செல்லல் தொடர்பான எவ்வித எழுத்து மூல சான்றுகளில் உறுதிப்படுத்தாதிருந்ததுடன் முன் அங்கீகாரமின்றி ஆண்டின் சகல மாதங்களிலும் 5 தினங்களுக்காக விடுமுறை தினப்படி ரூபா 10,000 படி ரூபா 120,000 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

05 வாகனங்களின் ஓட்ட அட்டவணை, கொடுப்பனவு உறுதிச்சீட்டு மற்றும் எரிபொருள் கட்டளைப் பதிவேடு என்பவற்றின் பரிசோதனையின் போது ரூபா 286,598 தொகையான பெறப்பட்ட எரிபொருள் ஓட்ட அட்டவணைகளில் பதியப்படாது கட்டளை படிவங்களிலும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களிலும் மாத்திரம் பதியப்பட்டிருந்தன. எரிபொருள் கட்டளையின் இரண்டாவது பிரதியில் வாகனத்திற்கு இடப்பட்ட டீசலின் அளவு பதியப்படாதிருந்ததுடன் அந்தக் கட்டளைக்காக கொடுப்பனவு செய்யும் போது ஓட்ட அட்டவணையில் வாகனத்திற்கு இடப்பட்ட எரிபொருள் பதியப்பட்டிருந்தமையும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்காக நிறுவகத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 8,575,023 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,467,357 பற்றாக்குறையானமையால் மீளாய்வாண்டினை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 5,107,666 தொகை வீழ்ச்சியடைந்திருந்தது. இந்த வீழ்ச்சிக்காக ஏனைய வருமானம் 37 சதவீதத்தினால் அல்லது ரூபா 5,615,683 இனால் குறைவடைந்தமை மற்றும் செயற்பாட்டுச் செலவினம் 10 சதவீதத்தினால் அல்லது ரூபா 5,451,583 இனால் உயர்வடைந்தமை முக்கியமாகத் தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அவர்களின் கடமைகளை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றக்கூடிய வகையில் செயலமர்வுகளையும் பயிற்சி பாடநெறிகளையும் நடாத்துவதற்கு 8 பிரிவுகளுக்காக வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 18,000,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது இதற்காக ரூபா 18,075,295 தொகை செலவிடப்பட்ட போதிலும் நிறுவகம் திட்டமிட்ட செயலாற்றலை அடையாதிருந்தமை ஒவ்வொரு பிரிவின் அறிக்கையின் படி அவதானிக்கப்பட்டது.

(i) பொறியியல் பிரிவின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 29 நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 21 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதன் நிதிச் செயலாற்றல் 66 சதவீதமாக இருந்தது. திட்டமிடப்பட்ட 04 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படாதிருந்ததுடன் ரூபா 500,000 தொகை ஒதுக்கப்பட்ட மாகாண சபை மட்டத்தில் 05 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) பொது முகாமைத்துவ பிரிவில் நிதி ஏற்பாட்டுத் தொகையை விட ரூபா 712,545 தொகை மேலதிகமாக செலவிடப்பட்டு திட்டமிடப்பட்ட 25 நிகழ்ச்சித்திட்டங்களில் 15 மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. இந்த பிரிவில் 04 தொகுதிகளின் கீழ் திட்டமிட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்காக மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்களையும் பங்குபற்றச் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஒரு நிகழ்ச்சித்திட்டத்திற்கேனும் உறுப்பினர்கள் பங்குபற்றச் செய்யப்பட்டிருக்கவில்லை. ரூபா 500,000 ஒதுக்கப்பட்ட மாகாண மட்டத்தில் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதி முகாமைத்துவப் பிரிவு

* ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 2,500,000 ஆக இருந்த போதிலும் ரூபா 3,338,530 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த செலவினப் பரிசோதனையின் போது பணம் அறவிட்டு நடாத்தப்படுகின்ற உள்ளூராட்சி நிதி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறிச் செலவினமான ரூபா 1,661,540 தொகை மற்றும் நிறுவனத்திலிருந்து பணம் அறவிட்டு நடாத்தப்பட்ட உயர் டிப்ளோமா பாடநெறியின் நிதி முகாமைத்துவ பிரிவிற்குரிய பகுதிக்காக 04 நாள் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தி அதற்காக செலவிட்ட ரூபா 77,723 தொகையும் இந்தப் பிரிவின் செலவினத்தில் சேர்க்கப்பட்டிருந்தது.

* மீளாய்வாண்டின் நிதி முகாமைத்துவப் பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து 70 சதவீதம் நோக்கத்திற்குரிய பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையினால் உள்ளூராட்சி நிறுவனங்களில் நிதி மற்றும் ஏனைய முகாமைத்துவ நடவடிக்கைகளின் அபிவிருத்தி மற்றும் செயற்திறனை ஏற்படுத்தும் பயிற்சி பாடநெறிகளை அமுல்படுத்துவதில் நலிவான நிலைமை காணப்படுகின்றமை அவதானிக்கப்படுகின்றது.

* செயல்நடவடிக்கைத் திட்டத்தின்படி, பணம் அறவிட்டு நடாத்தப்படுகின்ற டிப்ளோமா பாடநெறிகள் 24 தினங்களில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு 58 நாட்கள் எடுத்திருந்தன. இது ஒரு பாடநெறியாக உள்ளடக்கப்பட வேண்டியமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(iv) சட்டப்பிரிவில் திட்டமிடப்பட்ட 34 நிகழ்ச்சித்திட்டங்களில் 20 மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 2,500,000 தொகையை விஞ்சி ரூபா 308,297 தொகையும் செலவிடப்பட்டிருந்தது.

(v) ஆராய்ச்சி வெளியீடுகள் மற்றும் நூலகப் பிரிவின் 11 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ரூபா 2,500,000 தொகை செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருக்கும் போது 05 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு ரூபா 2,561,985 தொகை செலவிடப்பட்டிருந்தது. மாகாண மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 200,000 ஏற்பாடு காணப்பட்ட போதிலும் அது தொடர்பான செயல்முன்னேற்றம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அந்தப் பிரிவில் கட்டணம் அறவிடப்படுகின்ற ஆராய்ச்சி

முறைமை தொடர்பான சான்றிதழ்பத்திர பாடநெறிக்காகவும் செலவிடப்பட்ட ரூபா 425,000 தொகையும் இந்தப் பிரிவின் செலவினத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(vi) நிதிக்கூற்றுக்களில் பயிற்சி நிகழ்ச்சித்திட்ட செலவினம் மற்றும் ஒவ்வொரு பிரிவுகளினதும் செயல்முன்னேற்ற அறிக்கைகளுக்கிடையே ரூபா 2,734,649 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தின் பிரிவுப் பொறுப்பு உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட வேண்டிய கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரிப்பதற்காக நிறுவகத்தின் பொறியியல் ஆலோசகர் மற்றும் பணிப்பாளர் சபை செயலாளர் என்போரினால் ரூபா 100,000 தொகை பெறப்பட்டிருந்தது.

(ஆ) ஆண்டில் வெளியீடுகளின் விற்பனை வருமானம் ரூபா 43,904 இருந்தது. அது இருப்புப் பெறுமதியில் 2.8 சதவீதமான சிறிய விற்பனைப் பெறுமானம் ஆனமையால் வெளியீடுகளின் விற்பனை முன்னேற்றத்திற்காக எடுக்கப்பட்ட செயல்நடவடிக்கைகள் போதியளவாக இருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக்காரருடன் 2013 நவம்பர் 28 ஆந் திகதி கைச்சாத்திட்ட உடன்படிக்கையின் படி 300 தினங்களான ஒப்பந்தக் காலப் பகுதி 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதி முடிவடைந்து 60 தினங்கள் கடந்த போதிலும் கட்டிடத்தின் அத்திவாரம் மட்டும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

## 4.4 இனங்காணப்பட்ட நட்டம்

காகிதாதிகள் மற்றும் வெளியீடுகளின் இருப்பை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தாமையின் காரணமாக ரூபா 35,196 தொகையான காகிதாதிகளின் இருப்பு அழிவடைந்திருந்தது.

## 4.5 பதவியணியினர் நிருவாகம்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 48 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான எண்ணிக்கை 31 ஆனமையால் வெற்றிடங்கள் 17 ஆகும். வெற்றிடங்களை நிரப்புவதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.1 ஆம் பிரிவின் படி கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிறுவகத்தால்

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 07 மாத தாமதத்துடன் 2013 செப்தெம்பர் 17 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.2 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

(அ) 2014 மார்ச் 05 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் கணக்குக் குழுவின் தீர்மானித்தின் படி, 2011 ஆம் ஆண்டும் அதற்குப் பின்னரும் செலுத்தப்பட்ட ஊக்குவிப்புப் படிகளுக்காக மேவுகை அங்கீகாரம் திறைசேரியிலிருந்து பெறவேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 நவம்பர் மாதம் வரையிலும் அவ்வாறான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டு முதல் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிப்பதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கும் முறைமையொன்றைத் தயாரிப்பதற்கு 2014 மார்ச் 05 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் கணக்குக் குழுவினால் கட்டளை வழங்கப்பட்டிருந்தும் 2014 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரையிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அமைச்சின் அமைச்சரினால் பாராளுமன்றத்தின் இணக்கப்பாட்டுடன் வர்த்தமானி வெளியிடப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக நிறுவகத்தின் பணிப்பாளருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக முகாமைத்துவத்தின் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) சொத்துக்கள் முகமைத்துவம்

(ஆ) ஊழியர் கடன்

(இ) செயலமர்வுகளை நடாத்துதலும் படிக் கொடுப்பனவும்

(ஈ) வாகனக் கட்டுப்பாடு